# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.176/பேரூ/2023
நாள்: 27.07.2023

திருமதி R.ஜெயலட்சுமி,
ஏழுகிணறு, சென்னை ... மனுதாரர்

செயல் அலுவலர்,
நாரவாரிகுப்பம் பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம் .... எதிர்மனுதாரர்

சென்னை, ஏழுகிணறு, போர்ச்சுக்கீஸ் தெரு, எண் 46/2 என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி R.ஜெயலட்சுமி என்பவரது 01.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.06.2023 அன்று பெறப்பட்டு, 176/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, ஏழுகிணறு, போர்ச்சுக்கீஸ் தெரு, எண் 46/2 என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி R.ஜெயலட்சுமி என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், நாரவாரிகுப்பம் கிராமம் சர்வே எண்.97/B1, பஜனை கோயில் (சந்து) தெரு, செங்குன்றம், சென்னை–600 052 என்ற முகவரியில் 2400 சதுர அடிகள் கொண்ட மனையும் அதில் வீடும் உள்ளது.

எனது மனையின் பக்கத்தில் உள்ள திரு. S.தணிகாசலம் என்பவர் நான்கு அடுக்கு (G+3) வீடுகட்டிவருகிறார். அவரது கட்டுமானம் எனது மனையில் அத்துமீறி நடைபெறுகிறது. இது குறித்து நான் நாரவாரிகுப்பம் செயல் அலுவலர் அவர்களிடம் 10.3.2023 அன்று புகார் மனு கொடுத்தேன். மனுவைப்பெற்றுக்கொண்ட அலுவலர் ஆய்வு

செய்வதாக சொன்னார். அவரது வார்த்தையில் நம்பிக்கை இல்லாத நான் எனது 10.4.2023 நாளிட்ட கடிதத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் உறுப்பினர் செயலாளர் அவர்களுக்கும், நாரவாரிகுப்பம் நிர்வாக அதிகாரிக்கும் புகார் மனு அனுப்பினேன். அதன்பிறகு 20.04.2023 நாளிட்ட சென்னை வளர்ச்சிக்குழும அலுவலக கடிதம் எனக்கு கிடைத்தது. உடனே மேற்படி நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களிடம் நேரில் அணுகியதற்கு கட்டடம் கட்டி முடித்தாகிவிட்டது என்னால் எதுவும் செய்ய இயலாது என்று தெரிவித்தார். இதைக்கேட்டவுடன் நான் மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். அதன்பின்னர் இதுவரை எந்த அனுமதியும் இல்லாமல் கட்டடம் கட்டி வரும் மேற்படி நபரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே வேறுவழியின்றி தங்களிடம் இப்புகாரை தெரிவிக்கிறேன். தாங்கள் இது குறித்து விசாரித்து எனக்கு இயற்கை நீதி வழங்குமாறு மிக்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 17.07.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

திருவள்ளூர் மாவட்டம், நாரவாரிகுப்பம் பேரூராட்சிக்குட்பட்ட பஜனை கோயில் தெருவில் சந்தில் சர்வே எண் 97/B1–ல் திருமதி ஜமுனா, க/பெ. திரு.எஸ். தணிகாசலம் செட்டியார் என்பவர், அவருக்கு சொந்தமான இடத்தில் கட்டடம் கட்டி வருகின்றார். மேற்படி இடத்திற்கு தெற்கு பக்கத்தில் திருமதி ஆர். ஜெயலட்சுமி, க/பெ. ரமேஷ் என்பவருடைய காலிமனை உள்ளது. திருமதி ஜமுனா என்பவருடைய பத்திரத்தில் கீழ்க்கண்டவாறு அளவுகள் உள்ளன.

பத்திரத்தில் உள்ள அளவு

| | | |
|---|---|---|
| 1. | கிழக்கு மேற்காக | 24 அடி |
| 2. | கிழக்கு மேற்காக | 24 அடி |
| 3. | வடக்கு தெற்காக | 48 1/2 அடி |
| 4. | வடக்கு தெற்காக | 48 அடி |

மேற்கண்ட பத்திரத்தில் உள்ள அளவுகளில் கீழ்க்கண்ட அளவுகளில் திருமதி ஜமுனா என்பவர் கட்டடம் கட்டி வருகிறார்.

கட்டிடம் கட்டப்பட்டுள்ள அளவு

| | | |
|---|---|---|
| 1. | கிழக்கு மேற்காக | 17.2 அடி |
| 2. | கிழக்கு மேற்காக | 17.2 அடி |
| 3. | வடக்கு தெற்காக | 33.1 அடி |
| 4. | வடக்கு தெற்காக | 33.1 அடி |

மேலும் மேற்படி இடமானது சத்திரம் தர்மகர்த்தா என்ற பெயரில் பட்டா உள்ளதால் அந்த பகுதியில் எந்தஒரு கட்டடத்திற்கும் கட்டட வரைபட அனுமதி வழங்கிட இயலாதநிலை உள்ளதால் கட்டிட அனுமதி வழங்கப்படுவதில்லை.

மேலும், திருமதி ஜமுனா கொடுத்த ஆவணங்களில் உள்ள அளவுகளைக் கொண்டு செயல் அலுவலர் முன்னிலையில் பேரூராட்சி பணியாளர்களால் இடத்தினை அளவீடு செய்யப்பட்டது. மேலும் திரு. தணிக்காசலம் செட்டியார் என்பவர் சர்வேயர் மூலம் அன்னாருடைய வீட்டு மனையினை அளவீடு செய்து சர்வேயரால் அத்துகள் காண்பிக்கப்பட்டு மஞ்சள் நிற பெயிண்டால் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, திருமதி ஜமுனா கொடுத்த ஆவணங்களின்படி அளவீடு செய்யப்பட்டதில் திருமதி ஜமுனா என்பவரின் ஆவணங்களில் உள்ள அளவுக்குள்தான் கட்டடம் கட்டி வருகின்றார் எனவும், மேற்படி சர்வே எண் 97/B1–ல் உள்ள இடத்திற்கு பட்டா சத்திரம் தர்மகர்த்தா என்ற பெயரில் உள்ளதால் அப்பகுதியில் உள்ள எந்தவொரு கட்டடங்களுக்கும் வரைபட அனுமதி வழங்க வழிவகை இல்லை என்ற தகவலை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவர் அலுவலகத்தில் 17.07.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.07.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 17.07.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

சென்னை ஏழுகிணறு, போர்ச்சுக்கீஸ் தெரு, எண்.46/2 என்ற முகவரியில் வசிக்கும் எனக்கு திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நாரவாரி குப்பம் சர்வே எண் 97/B1, பஜனை கோவில் தெருவில் மனையும், அதில் வீடும் உள்ளது. எனது மனையின் பக்கத்தில், திரு. தணிகாசலம் என்பவர் நான்கு அடுக்கு மாடி கொண்ட கட்டடம்கட்டி வருகிறார். மேற்கண்ட கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் எனது மனையிலும் சேர்த்து அத்துமீறி நடைபெறுகிறது. இது தொடர்பாக பேரூராட்சியில் புகார் மனுக்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனைத் தொடர்ந்து சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு புகார் மனு அனுப்பபட்டு, எனது மனுவின் மீது பேரூராட்சியால் நடவடிக்கை எடுத்து எனக்கும், அதன் நகலினை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அனுப்புமாறு கோரப்பட்டிருந்தது. ஆனால் மேற்கண்ட கடிதத்தின் மீது பேரூராட்சியால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

எனவே எனது மனையில் அத்துமீறி கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் மீது பேரூராட்சியால் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

6) 17.07.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள நாரவாரிகுப்பம் பேரூராட்சிக்குட்பட்ட பஜனை கோயில் தெரு சர்வே எண் 97/B1ல் திருமதி ஜமுனா, க/பெ தணிகாச்சலம் என்பவர் வீடு கட்டி வருகிறார். மேற்கண்ட மனைக்கான பட்டா சத்திரம் தர்மகர்த்தா என்ற பெயரில் உள்ளதால் அக்கட்டடத்திற்கும், அப்பகுதியில் உள்ள எந்தவொரு கட்டடத்திற்கும் வரைபட அனுமதி வழங்க இயலாத நிலை உள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு 3.4.2023 அன்று வரைபட ஆவணங்களைக் கோரி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும், மேலும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கடிதத்திற்கு பேரூராட்சியால் பதில் ஏதும் அனுப்பப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட வரைபட அனுமதி நோட்டீஸைத் தொடர்ந்து அதன் தொடர் நடவடிக்கையாக Deoccupation, Demolition தாக்கீதுகள் வழங்கப்படும் என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்து, இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் 17.7.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மற்றும்) விதிகளில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு 7 " The Ombudsman shall perform all or any of the following functions namely:-

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

சென்னை, ஏழுகிணறு, போர்ச்சுக்கீஸ் தெரு, எண் 46/2 என்ற முகவரியில் வசித்துவரும் மனுதாரர் திருமதி R.ஜெயலட்சுமி, திருவள்ளூர் மாவட்டம், நாரவாரிகுப்பம் பேரூராடசிக்குட்பட்ட புல எண் 97/B1ல் தனக்குச் சொந்தமான மனையின் அருகிலுள்ள திருமதி ஜமுனா, க/பெ. தணிகாசலம் என்பவர் சர்வே எண் 97/B1ல் நான்கு அடுக்குக்கட்டடம் (G+3) கட்டி வருகின்ற நிலையில் தனது மனை இடத்தையும் ஆக்கிரமித்து கட்டி வருவதாக தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் புகாருக்கு, நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் சர்வே எண்.97/B1 மனைக்கான பட்டா " சத்திரம் தர்மகர்த்தா " என்ற பெயரில் உள்ளதால், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் திருமதி ஜமுனா என்பவர் கட்டி வரும் கட்டடத்திற்கும், அப்பகுதியிலுள்ள எந்தவொரு கட்டடத்திற்கும் வரைபட அனுமதி வழங்க இயலாதநிலை உள்ளது என்று தெரிவித்து, திருமதி ஜமுனா என்பவரின் பத்திர ஆவணங்களின் அடிப்படையில் பக்கத்து மனைகளில் ஆக்கிரப்பு இன்றி, அவரது சொந்தமான இடத்திலேயே கட்டடம் கட்டி வருவதாக தெரிவித்து, ஆனால் நாரவாரிகுப்பம் பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டி வருவதால் மேற்கண்ட கட்டடத்திற்கு வரைபட ஆவணங்கள் கோரி 3.4.2023 அன்று அறிவிப்பு வழங்கியுள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தில் மனுதாரர் தனது மனையில் ஆக்கிரமித்து கட்டடம் கட்டுவதாக புகார் அளித்ததைத் தொடர்ந்து அக்குழுமம் கேட்டுக் கொண்டுள்ளபடி இப்புகார் குறித்து எவ்வித நடவடிக்கையும் பேரூராட்சி செயல் அலுவலரால் எடுக்கபடவில்லை. மேற்காணும் செயல்பாடுகளின் மூலம் நாராவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலரின் பணியில் பொறுப்பற்ற தன்மையும், அலட்சியப்போக்கும் மற்றும் அஜாக்கிரதையும் அப்பட்டமாகத் தெரிகிறது.

இந்நிலையில் பேரூராட்சிக்குட்பட்ட இடத்தில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் திருமதி ஜமுனா என்பவர், பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டடப்பட்டு வரும் கட்டடம் குறித்து நகர் ஊரமைப்புச் சட்டடத்தின்கீழ் உரிய விதிகளின்படி உரிய காலத்தில் Lock & Seal மற்றும் நீதிமன்ற நடவடிக்கை போன்ற சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இருப்பது பேரூராட்சி செயல் அலுவலரின் பணியில் மெத்தனமாகவும் உள்நோக்கத்துடனும் நடந்து கொள்வதாகவும் இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இவ்வாறு பணியில் கடமை தவறி, பொறுப்பற்ற முறையில் செயல்பட்டுள்ள நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

Strict disciplinary action should be taken against the Executive Officer and other field officials concerned for their wilful default,

omission and dereliction of duties wantonly failing to curb such Building violations before their eyes in stark daylight. This is tantamount to violation of their sacred duties besides exposing complicity, collusion and criminal abetment to such illegal activities as in this present case. The Director of Town Panchayats is directed to comply with the orders of the Forum and send an action taken report within Two(2) months.

2023–ஆம் ஆண்டு, ஜுலை 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி R.ஜெயலட்சுமி,
எண் 46/2,போர்ச்சுக்கீஸ் தெரு,
ஏழுகிணறு, சென்னை

2) செயல் அலுவலர்,
நாரவாரிகுப்பம் பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர்
(Nodal Officer)(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்